# திருமங்கலம் நகராட்சி

## 20/07/2021 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள் தீர்மானம்

1)திருமங்கலம் நகராட்சி வார்டு எண்.20 உத்தண்டன் தெருவில் கழிவுநீர் பாதாள சாக்கடை தொட்டியில் தொடர்ந்து அடைப்பு ஏற்பட்டு அப்பகுதிகளில் கழிவுநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படும் நிலை உருவாகியது. இதனை சரிசெய்யும் பொருட்டு மேற்காணும் தெருவில் ஏற்கெனவே உள்ள பாதாளசாக்கடை தொட்டிகளை அகற்றிவிட்டு புதிதாக 13 எண்ணிக்கை தொட்டிகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் காரணமாக அத்தெருவில் உள்ள பழைய சிமெண்ட் சாலை முற்றிலும் சேதமடைந்து உள்ளதால் சாலையினை சீரமைப்பது அவசியமாகிறது. எனவே சேதாரமுற்ற நிலையில் உள்ள பழைய பேவர்பிளாக் சாலையினை அகற்றி விட்டு புதிதாக பேவர்பிளாக் தளம் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7,00,000/—க்கும் இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேமற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க.எண்.1382/2021/இ1**
**தீர்மானம் எண்.2305: அனுமதிக்கப்பட்டது.**

2)திருமங்கலம் நகராட்சி தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு செய்து வரும் பணிக்கு தலைமைபொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை ந.க.எண்.29045/2019/டிஓ2 நாள்.24.01.2020ம் தேதிய கடிதத்தில் ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கியது தொடர்ந்து இந்நகராட்சிக்கான தெருவிளக்கு பராமரிப்பு பணியினை M/s.சடையாண்டி இன்டஸ்ட்ரீஸ், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் என்ற நிறுவனம் மூலம் 07.04.2020 முதல் 06.04.2021 வரை ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண். 29045/2019/டிஓ2 நாள்.01.06.2021—ன்படி மேலும் ஓராண்டிற்கு மேற்காணும் நிறுவனம் மூலம் 07.04.2021 முதல் 06.04.2022 வரை (இரண்டாம் ஆண்டிற்கு) தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிக்கான தெருவிளக்கு பராமரிப்பு பணியினை 07.04.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு முதன்மை தலைமைபொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான திட்ட மதிப்பீட்டில் Section -1(Part II) வரிசை எண்.7ன்படி ஏற்கெனவே ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் இருந்து 5% உயர்த்தி திருவாளர் சடையாண்டி இன்டஸ்ட்ரீஸ், ஆண்டிப்பட்டி என்ற நிறுவனம் மூலம் பணியினை மேற்கொள்வதற்கும் இதற்கான செலவினத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க.எண்.2160/2019/இ1**
**தீர்மானம் எண்.2306: அனுமதிக்கப்பட்டது.**

3)திருமங்கலம் நகராட்சி வார்டு.20 உத்தண்டன் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணியினை ரூ. 7,00,000 மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி நாள். 30.06.2021 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 20.07.2021–ம் தேதியில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. விபரம்

பின்வருமாறு

1) திரு.சி.ஜெயச்சந்திரன், ஒப்பந்ததாரர்
திருமங்கலம் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.07 % குறைவு

2) திரு. எம்.கருப்பையா, ஒப்பந்ததாரர்
திருமங்கலம் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.17 % அதிகம்

**அ.கு:**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி.ஜெயச்சந்திரன், திருமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1382/2021/ இ1**

**தீர்மானம் எண்.2307: அனுமதிக்கப்பட்டது.**

4)இந்நகராட்சி வரியினங்களான சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகிய வரியினங்களில் உள்ள கேட்பினை வசூல் செய்வதற்கு கேட்பு அறிவிப்பு அச்சடித்து தருவதற்கு (பேப்பர் மற்றும் அச்சிடும் கூலி உட்பட) குறுகிய கால விலைப்புள்ளி கோரி கேட்பு அறிவிப்பினை அச்சிட்டுத் தருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :

வசூல் நடவடிக்கையினை தீவிரப்படுத்தும் பொருட்டு அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1092/2021/அ1

**தீர்மானம் எண்.2308: அனுமதிக்கப்பட்டது.**

5)இந்நகராட்சி வரியினங்களான சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகிய வரியினங்களில் உள்ள கேட்பினை வசூல் செய்வதற்கு கேட்பு அறிவிப்பு அச்சடித்து தருவதற்கு (பேப்பர் மற்றும் அச்சிடும் கூலி உட்பட) குறுகிய கால விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 09.07.2021 அன்று கீழ்க்கண்ட விபரப்படி 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஏ4 சைஸ் அளவில் அச்சிட்டு கொடுப்பதற்கு பேப்பர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | சக்தி அவுட்புட்ஸ்,<br>57,டவுன்ஹால் ரோடு,<br>மதுரை | 2.50 |
| 2 | கற்பகா பிரிண்டர்ஸ்,<br>12/14, பள்ளிவாசல் தெரு,<br>கோரிப்பாளையம்,<br>மதுரை | 2.20 |
| 3 | வேலவா ஏடிஎஸ்,<br>127எப், பொன்மேனி புதூர்,<br>பைபாஸ் ரோடு,<br>மதுரை. | 1.70 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.3ல் கண்டுள்ள வேலவா ஏடிஎஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியானது குறைவாக இருப்பதால் மேற்கண்ட விலைப்புள்ளியினை அனுமதித்து வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு :

1) அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1092/2021/அ1

**தீர்மானம் எண்.2309: அனுமதிக்கப்பட்டது.**

**6)**இந்நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் தெருவில் அமைந்துள்ள தினசரி சந்தையில் உள்ள கடைகளில் அல்லது மாற்று இடத்தில் தினசரி சந்தை நடைபெறும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 08.07.2021 அன்று மறு பொது ஏலம் நடைபெற்றது. ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. ஒரே ஒரு நபர் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டார்.

| வ. எண் | ஏலதாரரின் பெயர் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தீபக்குமார்<br>105/5, சியோன்நகர் 2வது தெரு,<br>சியோன் நகர், திருமங்கலம். | 12,30,000/– |

பொது ஏலத்தில் ஒரே ஒரு நபர் மட்டும் கலந்து கொண்டதால் மறுஏலம் விட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :**

அனுமதிக்கலாம்.

ந.க.எண்.62/2021/அ1

**தீர்மானம் எண்.2310: அனுமதிக்கப்பட்டது.**

**7)**இந்நகராட்சிக்கு சொந்தமான கழிவு நீரேற்று நிலையத்தில் சேகரிக்கும் சில்ட் கழிவுகளை எடுத்துக் கொள்ளும் உரிமைக்கு 08.07.2021 அன்று மறு பொது ஏலம் நடைபெற்றது. ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. கீழ்க்கண்ட விபரப்படி மறு பொது ஏலத்தில் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | ஏலதாரரின் பெயர் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஆர்.சபாபதி,<br>71, சௌந்தரபாண்டியன் சந்து<br>திருமங்கலம் | 3,500/– |
| 2 | பா.அம்சராஜன்,<br>3சி/4டி, ஆறுமுகம் வடக்குத் தெரு,<br>திருமங்கலம். | 3,600/– |

மேற்கண்ட பொது ஏலத்தில் வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.பா.அம்சராஜன் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.3,600/– கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு :**

உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய திரு.பா.அம்சராஜன் என்பவரின் ஏலக்கேள்வித் தொகை ரூ.3,600/–ஐ மன்றம் அனுதிக்கலாம்.

ந.க.எண்.62/2021/அ1

**தீர்மானம் எண்.2311: அனுமதிக்கப்பட்டது.**

**8)**இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலக வளாக பின்புறம் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு **08.07.2021** அன்று மறு பொது ஏலம் நடைபெற்றது. ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. கீழ்க்கண்ட விபரப்படி மறு பொது ஏலத்தில் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | ஏலதாரரின் பெயர் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜி.சின்னச்சாமி<br>**28**ஏ, கபில்தெரு,<br>முகமதுஷாபுரம்,<br>திருமங்கலம் | அரசாங்க மதிப்பு அதிகமாக உள்ளதாக தெரிவித்து ஏலதாரர் ஏலக் கேள்வி எதுவும் கேட்கவில்லை. |
| 2 | பி.முருகன்<br>**63**ஏ/**161**, முன்சீப் கோர்ட் ரோடு<br>திருமங்கலம். | அரசாங்க மதிப்பு அதிகமாக உள்ளதாக தெரிவித்து ஏலதாரர் ஏலக் கேள்வி எதுவும் கேட்கவில்லை. |

அரசாங்க மதிப்பு அதிகமாக உள்ளதாக தெரிவித்து ஏலதாரர் ஏலக் கேள்வி எதுவும் கேட்கவில்லை என்பதால் மறு ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :**அனுதிக்கலாம்.
ந.க.எண்.**62/2021/**அ**1**
**தீர்மானம் எண்.2312: அனுமதிக்கப்பட்டது.**

**9)**திருமங்கலம் நகராட்சியில் உள்ள குத்தகை இனங்களில் **25.06.2021** பொது ஏலம் விடப்பட்டதில் ஏலம் போகாத இனங்களுக்கு நிர்வாக ரீதியாக வசூல் செய்யும் பொருட்டு பேருந்து நிலைய நுழைவுக் கட்டண ரசீது மற்றும் திருமங்கலம் நகராட்சி தினசரி சந்தை வசூல் கட்டண ரசீது அச்சடித்து விநியோகம் செய்யும் பணிக்கு **28.06.2021** அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | வெங்கடேஷ்வரா பிரிண்டர்ஸ், திருமங்கலம் | புத்தகம் ஒன்றுக்கு | 40 |
| 2 | ஸ்ரீஅய்யப்பன் பிரிண்டர்ஸ், திருமங்கலம் | | 41 |
| 3 | கஸ்தூரி அச்சகம்,திருமங்கலம் | | 43 |

அ.கு

**1)** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வெங்கடேஷ்வரா பிரிண்டர்ஸ், திருமங்கலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**2)** நிர்வாக ரீதியாக வசூல் செய்யும் வரை மேற்கண்ட விலை விகிதத்தின்படி ரசீதுகள் அச்சிடுவதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.**20000/–**க்கு அனுமதி வழங்கலாம்.

**3)** பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.**1246/2021/**பி**2**
**தீர்மானம் எண்.2313: அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்
திருமங்கலம் நகராட்சி.